TAMIL NADU DR. J. JAYALALITHAA FISHERIES UNIVERSITY, NAGAPATTINAM

10th Convocation

The 10th convocation ceremony of the Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University was held on 03.11.2025, at the university campus under the chairmanship of the Honourable Governor of Tamil Nadu and Chancellor of the University, Thiru. R. N. Ravi. At this convocation ceremony, degrees were awarded in person to a total of 435 students, including 283 Bachelor of Fisheries Science, 27 B.Tech (Fisheries Engineering), 11 B.Tech (Energy and Environmental Engineering), 2 B.Tech (Fisheries Nautical Technology), 26 B.Tech (Biotechnology), 19 B.Tech (Food Technology), 17 B.B.A (Fisheries Business Management), 53 (Bachelor of Vocation Course), 46 Master of Fisheries Science, 3 M.B.A (Fisheries Business Management), 4 Master of Technology and 21 Ph.D. students. In addition, 77 students are to receive their degrees by post.

The Honourable Governor awarded a total of 86 medals to students for various academic achievements. For the 2020-2021 batch, Selvi. S. Bhavadharani received 10 medals in Bachelor of Fisheries Science, Selvi. M. Brindha received 3 medals in B.Tech (Fisheries Engineering), Selvi. G.M. Dharsica and Selvan. P.J. Jason Prasangi Paul each received 1 medal in B.Tech (Biotechnology), Selvi. K.C. Ahila Benet received 1 medal in B.Tech (Food Technology), and R.P. Hemalatha received 3 medals in B.B.A (Fisheries Business Management).

Similarly, for the 2021-2022 batch, Selvan. S. Kavi Revanth received 11 medals in Bachelor of Fisheries Science, Selvi. K. Vidhya, Selvan. K. Naveen Kumar, and Selvan. V. Karthikeyan each received 1 medal in the Bachelor of Vocation Course, and Selvan. O. Himanshu Bhagde received 2 medals in M.B.A (Fisheries Business Management). Additionally, for the 2022-2023 batch, Selvi. P.N. Aishwarya received 7 medals in Master of Fisheries Science, Selvi. S. Ayesha Jasmin received 1 medal in M.Tech (Fisheries Engineering), Selvan. Prakhar Sharma received 1 medal in M.Tech (Biotechnology), and Selvi. M. Joshna received 4 medals in the Ph.D. program.

The chief guest of the convocation ceremony, Dr. Joykrishna Jena, Deputy Director General (Fisheries Science) of the Indian Council of Agricultural Research (ICAR), gave the convocation address. In his address, he praised the university for creating many new colleges, institutes, Training and Incubation Centres in fisheries over the last 13 years. He noted that every year, about 30 to 40 Postgraduate and

Doctoral students from this university joining at the ICAR-Central Institute of Fisheries Education, Mumbai. He also pointed out that by 2050, the world population will be more than 9 billion and India's population will be 1.67 billion, and food and livelihood will increase accordingly.He emphasized that the fisheries department will play a major role in meeting the food needs of the people in the coming years.

He said that since there are a large number of young people in our country, the fisheries production should be used to increase individual income and improve the country's economy and fisheries. He also said that the annual growth of the fisheries sector should be increased from 6% to 9% in the coming years and that this goal can be achieved through graduates with Bachelor's, Master's and Doctoral degrees starting government, private and self-employed jobs. He said that the role of fisheries education and professionals is vital in this transformative journey of making India a leading producer and consumer of quality fish in the world.

He highlighted that **globally, fisheries education supports the UN Sustainable Development Goals,** particularly **SDG 2 (Zero Hunger)** and **SDG 14 (Life Below Water)**, by promoting environmentally sustainable food systems. He mentioned that **the central budget for the 2025–26 financial year has allocated ₹2,704 crore to the fisheries department,** which stands as a testament to **India's achievement as a global leader in aquaculture and seafood exports.** He also advised the students **to make the best use of the opportunities before them to serve the nation.** Finally, he noted that **the First Indian Fisheries Students' Innovation and Startup Conference (IFSISC 2025)**, organized by **TNJFU** earlier this year, **was a great success**, and said that **he was very pleased to have witnessed it**.

Earlier, the Vice-Chancellor of the university, Professor N. Felix, welcomed everyone and read out the university's report. In the report, he highlighted the achievements in education, research, and extension activities under 40 constituent units of the university spread across the state.

Before the Convocation, the Hon'ble Governor planted *Avicennia* mangrove plant in order to expand the area of mangrove forest ecosystem in the Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University Campus. The Hon'ble Governor also inaugurated the Biofloc Technology - Student Experiential Learning and Research Unit for the benefit of students in the University Campus.

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்

10 வது பட்டமளிப்பு விழா – பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழா 03.11.2025 அன்று **மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் உயர்திரு. ஆர். என். ரவி** அவர்கள் தலைமையில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இப்பட்டமளிப்பு விழாவில், 283 இளநிலை மீன்வள அறிவியல், 27 பி.டெக் (மீன்வள பொறியியல்), 11 பி.டெக் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), 2 பி.டெக் (மீன்வள மாலுமிக்கலைத் தொழில்நுட்பவியல்), 26 பி.டெக் (உயிர் தொழில்நுட்பவியல்) 19 பி.டெக் (உணவு தொழில்நுட்பவியல்), 17 பி.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை), 53 (இளநிலை தொழில்சார் படிப்பு), 46 முதுநிலை மீன்வள அறிவியல், 3 எம்.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை), 4 முதுநிலை தொழில்நுட்பவியல் மற்றும் 21 முனைவர் பட்டங்கள் என மொத்தம் 435 மாணவ–மாணவியருக்கு நேரடியாக பட்டங்கள் வழங்கப்பட்டன. மேலும், 77 மாணவ–மாணவியர் தங்களது பட்டங்களை தபால் மூலம் பெற உள்ளனர்.

மேதகு ஆளுநர் அவர்கள் **மொத்தம் 86 பதக்கங்களை** வெவ்வேறு கல்வி சாதனைகளுக்காக மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். இதில் 2020–2021 கல்வியாண்டிற்கான இளநிலை மீன்வள பட்டபடிப்பில் செல்வி. எஸ். பவதாரணி 10 பதக்கங்களையும், பி.டெக் மீன்வள பொறியியல் பட்டப்படிப்பில் செல்வி. எம். பிருந்தா 3 பதக்கங்களையும், பி.டெக் உயிர் தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பில் செல்வி. ஜி.எம்.தர்ஷிகா மற்றும் செல்வன். பி.ஜெ.ஜேசன் பிரசங்கி பால் ஆகியோர் முறையே 1 பதக்கமும், பி.டெக் உணவு தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பில் செல்வி கே.சி. அகிலா பெனெட் 1 பதக்கமும், பி.பி.ஏ மீன்வள வணிக மேலாண்மை பட்டப்படிப்பில் ஆர்.பி.ஹேமலட்சுமி 3 பதக்கங்களையும் பெற்றனர்.

அதேபோல் 2021–2022 கல்வியாண்டிற்கான இளநிலை மீன்வள பட்டபடிப்பில் செல்வன். எஸ். கவி ரேவந்த் 11 பதக்கங்களையும், இளநிலை தொழில்சார் பட்டபடிப்பில் செல்வி.கே.வித்யா, செல்வன்.கே.நவீன்குமார், மற்றும் செல்வன்.வி.கார்த்திகேயன் ஆகியோர் முறையே 1 பதக்கமும், எம்.பி.ஏ மீன்வள வணிக மேலாண்மை படிப்பில் செல்வன். ஹிமான்சு பாக்டே 2 பதக்கங்களையும் பெற்றனர். மேலும் 2022–2023 கல்வியாண்டிற்கான முதுநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பில் செல்வி பி.என்.ஐஸ்வர்யா 7 பதக்கங்களையும், எம்.டெக் மீன்வள பொறியியல் பட்டப்படிப்பில் செல்வி எஸ்.ஆயிஷா ஜாஸ்மின்1 பதக்கமும், எம்.டெக் உயிர்தொழில்நுட்பவியல் படிப்பில் செல்வன். பிரகார் சர்மா 1 பதக்கமும் முனைவர் பட்டப்படிப்பில் செல்வி.எம்.ஜோஷ்னா 4 பதக்கங்களையும் பெற்றனர்.

இப்பட்டமளிப்பு விழாவின் முதன்மை விருந்தினராக கலந்துக்கொண்ட இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் (புதுதில்லி) துணை இயக்குநர் தலைவர் (மீன்வள அறிவியல்) முனைவர் ஜாய் கிருஷ்ணா ஜெனா அவர்கள் பட்டமளிப்பு உரையை நிகழ்த்தினார். பட்டமளிப்பு உரையில், இந்த மீன்வள பல்கலைக்கழகம் தொடங்கி 13 ஆண்டுகளில் மீன்வளத்தில் பல புதிய பல்த்துறை பட்டபடிப்புகளை உருவாக்கியதற்காக இப்பல்கலைக்கழகத்தை பாராட்டினார். இப்பல்கலைக்கழகத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் 30 முதல் 40 முதுகலை மற்றும் முனைவர் மாணவர்கள் மீன்வள பட்டப்படிப்பிற்காக மத்திய மீன்வளப் பல்கலைக்கழகம் மும்பையில் கல்வி பயின்று வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுட்ன் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் 2050 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை 9 பில்லியனுக்கும் அதிகமாகவும் இந்தியாவின் மக்கள்தொகை 1.67 பில்லியனாகவும் இருக்கும் என்றும் அதற்கு ஏற்றாற்போல் உணவு மற்றும் தேவைகளும் அதிகமாகும் எனவும் எடுத்துரைத்தார். இந்நிலையில் வரும் காலங்களில் மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு மீன்வளத்துறை முக்கிய பங்காற்றும் என்றும் எடுத்துரைத்தார்.

நம் நாட்டில் இளைஞர்கள் அதிகமாக இருப்பதால் மீன்வள உற்பத்திக்கு பயன்படுத்தி தனிநபர் வருமானத்தை அதிகப்படுத்துவதோடு நாட்டின் பொருளாதாரம் மற்றும் மீன்வளத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் கூறினார். வரும் காலங்களில் மீன்வளத்துறையின் வருடாந்திர வளர்ச்சியை 6 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றும் அதற்கு ஏற்றாற்போல் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகள் அரசுத் துறை , தனியார் துறை மற்றும் சுய தொழில் தொடங்குவதன் மூலமாக இந்த இலக்கை அடையலாம் எனவும் கேட்டுக்கொண்டார். உலகிலேயே தரமான மீன்களை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியாவை மாற்றுவதற்கு மீன்வளக் கல்வி மற்றும் நிபுணர்களின் பங்கு மிக முக்கியமானது என தெரிவித்தார்.

உலகளவில் மீன்வளக் கல்வி, சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான உணவு முறையை ஊக்குவிப்பதன் மூலம், குறிப்பாக SDG 2 (பசியின்மை) மற்றும் SDG 14 (நீருக்கடியில் வாழ்க்கை) என்ற ஐ.நா வின் நிலையான வளர்ச்சி இலக்குகளை ஆதரிக்கிறது. 2025–26 ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் மீன்வளத் துறைக்கு இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக ரூ.2704 கோடி ஆண்டு பட்ஜெட் நிதியுதவி வழங்கப்பட்டது. இது மீன்வளர்ப்பு மற்றும் கடல் உணவு ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கும் இந்தியாவின் சாதனைக்கு ஒரு சான்றாகும் என்று கூறினார். மேலும் மாணவர்களுக்கு இந்த

நாட்டிற்கு சேவை செய்ய உங்களுக்கு முன் இருக்கும் வாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

இறுதியாக இந்த ஆண்டு இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் இந்திய மீன்வள மாணவர்கள் கண்டுபிடிப்பு மற்றும் ஸ்டார்ட்அப் மாநாடு (IFSISCI 2025), ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது எனவும் அதில் நானும் பங்கேற்றதில் மிக்க மகிழ்ச்சி எனவும் தெரிவித்தார்.

முன்னதாக, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், **பேராசிரியர் நா. பெலிக்ஸ்** அவர்கள் அனைவரையும் வரவேற்று பல்கலைக்கழகத்தின் அறிக்கையை வாசித்தார். அவ்வறிக்கையில் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி மற்றும் மாநில முழுவதும் பரவியுள்ள பல்கலைக்கழகத்தின் 40 உறுப்பு அலகுகளின் மூலம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க செயல்பாடுகளில் நிகழ்த்திய சாதனைகளை எடுத்துரைத்தார்.

பட்டமளிப்பு வழாவில் கலந்து கொள்வதற்கு முன்பாக மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அவிசினியா அலையாத்தி தாவரத்தை தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் சதுப்பு நிலக் காடுகளை உருவாக்கும் நோக்கத்தோடு நடவுசெய்து தொடங்கி வைத்தார். மேலும் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களுக்கான உயர்தொழில்நுட்ப முறையான உயிர்கூழ்மமுறையில் இறால் வளர்ப்பு (Biofloc Technology) – அனுபவ கற்றல் மற்றும் ஆராய்ச்சி கூடத்தையும் தொடங்கி வைத்தார்.